**ஆறாம் வகுப்பு : மூன்றாம் பருவம் - வினா விடை**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**இயல்-1**

**கவிதைப்பேழை: பாரதம் அன்றைய நாற்றங்கால்**

1.தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல் **விடை: ஆ) திருக்குறள்**

2.காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம் **விடை: அ) காவிரிக்கரை**

3.கலைக்கூடமாகக் காட்சி தருவது ________. **விடை: அ) சிற்பக்கூடம்**

4.நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________. **விடை: அ) நூல்+ஆடை**

5.எதிர்+ஒலிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____**விடை: இ) எதிரொலிக்க**

**குறு வினா**

**1.தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

திருவள்ளுவர், காளிதாசர், கம்பர் ஆகியோர் தாராபாரதியின் பாடலில் இடம் பெற்றுள்ள கவிஞர்கள் ஆவார்கள்.

**2.இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.**

“மேற்கு மலைகள் நதிகளை அனுப்பிக் கிழக்குக் கரையின் நலம் கேட்கும்!”. என்று காட்சிப்படுத்துகிறார் கவிஞர்.

**உரைநடை உலகம் : தமிழ்நாட்டில் காந்தி**

1.காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் **விடை: (ஆ) மதுரை**

2.காந்தியடிகள் ---------------- பெரியவரின் அடிநிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்? **விடை: (இ) உ.வே.சா.**

**குறு வினா**

**1.காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை?**

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் செல்ல எல்லா மக்களுக்கும் அனுமதி இல்லாததால், காந்தியடிகள் நுழையவில்லை.

**2.காந்தியடிகள் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக.**

1937-ம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது.அங்குஉ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார். “இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது”, என்று கூறினார்.

**சிறு வினா**

**1.காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.**

காந்தியடிகள் செல்லும் வழியில் உழவர்கள் வயலில் இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே அணிந்து வேலை செய்து கொண்டு இருப்பதைக் கண்டு, தான் மட்டும் இவ்வளவு துணிகளை அணிவதா? என்று சிந்தித்தார். அன்றுமுதல் வேட்டியும் துண்டும் மட்டுமே அணியத் தொடங்கினார்.

**2.காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை ஏழுதுக.**

தென்னாப்பிரிக்காவில் இருந்த போது,காந்தியடிகள் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கினார்.திருக்குறள் அவரைக் கவர்ந்த நூலாகும்.1937-ம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது.அங்குஉ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார். “இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது”, என்று கூறினார்.

**கற்கண்டு : நால்வகைச் சொற்கள்**

சொல்வகையை அறிந்து பொருந்தாச் சொல்லை வட்டமிடுக.

**விடைகள்:** 1. -அ) படித்தாள் 2. ஈ) ஆல்
3. இ) சித்திரை 4. அ) மாநாடு

**குறு வினா**

**1.சொல் என்றால் என்ன?**

எழுத்துகள் தனித்து நின்றோ, தொடர்ந்து வந்தோ பொருள் தருவது சொல் எனப்படும்.

**2.சொற்களின் வகைகளை எழுதுக.**

சொற்கள் 4 வகைப்படும்.
1.பெயர்ச்சொல் 2.வினைச்சொல்
3.இடைச்சொல் 4.உரிச்சொல்

**3.பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்களை எவ்வாறு வழங்குகிறோம்?**

பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்களை இடைச்சொல் என்று வழங்குகிறோம். இது தனித்து இயங்காது.

**விரிவானம் : வேலுநாச்சியார்**

**வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.**

- போரில் வேலுநாச்சியாரின் கணவர் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார்.
- மைசூர் மன்னர் ஐதர்அலி பெரியமருது, நாச்சியார் படையுடன் சேர்ந்து ஆங்கிலே லயரை எதிர்த்தனர்.
- “நாம் முதலில் காளையார்கோவிலைக் கைப்பற்றுவோம். பிறகு சிவகங்கையை மீட்போம்“ என்றார்
- வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் ஆங்கிலேயரின் படை தோற்று ஓடியது.
- இறுதியில் ஆங்கிலப்படை தோல்வியடைந்து கோட்டையை விட்டு ஓடியது.
- வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர்அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

## இயல் -2

### கவிதைப்பேழை : பராபரக்கண்ணி

1.தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.**விடை: அ) தம்முயிர்**

2.இன்புற்று + இருக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____ **விடை: அ) இன்புற்றிருக்க**

3.தானென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________. **விடை: ஆ) தான் +என்று**

4.சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ________. **விடை: இ) சுறுசுறுப்பு**

**குறு வினா**

**1.யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?**
கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.

**2.இன்பநிலை எப்போது வந்து சேரும்?**
இன்பநிலை அன்பர்களுக்குத் தொண்டு செய்யும் போது வந்து சேரும்.

**சிறுவினா**

**1.தாயுமானவர் வேண்டுவன யாவை?**
கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும். அதற்காக என்னை ஆக்கிவிட்டால் போதும் இன்பநிலை தானே வரும். எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும் வேறு எதையும் நினைக்க மாட்டேன் என்று தாயுமானவர் வேண்டுகிறார்.

### கவிதைப்பேழை : நீங்கள் நல்லவர்

1.பரிசு பெறும்போது நம் மனநிலை ________ ஆக இருக்கும். **விடை: (இ) மகிழ்ச்சி**

2.வாழ்வில் உயர கடினமாக __________வேண்டும். **விடை: (ஈ) உழைக்க**

**குறுவினா**

**1.பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?**
கொடுப்பது பழத்தின் இயல்பு, பெறுவது வேரின் இயல்பு.

**2.உழைக்கும் போது என்னவாக ஆகிறோம்?**
உழைக்கும் போது புல்லாங்குழலாக மாறுகிறோம்.

### உரைநடை உலகம் :பசிப்பிணி போக்கியபாவை

1.மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு
**விடை:இ)மணிபல்லவத் தீவு**

2.மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண் **விடை: ஆ) ஆதிரை**

**குறுவினா**

**1.அமுதசுரபியின் சிறப்பு யாது?**
அமுதசுரபியில் இட்ட உணவு எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்ந்து கொண்டே இருக்கும்.

**2.கோமுகி என்பதன் பொருள் யாது?**
பசுவின் முகம்

**சிறு வினா**

**1.மணிபல்லவத் தீவு எவ்வாறு காட்சி அளித்தது?**
எங்குப் பார்த்தாலும் வெண்மணல் குன்றுகள், பூத்துக் குலுங்கும் செடிகொடிகள், அடர்ந்த மரங்கள் இடையே பொய்கைகள், மனதை மயக்கும் காட்சிகள் என மணிபல்லவத் தீவு காட்சி அளித்தது.

**2.மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?**
எவை நன்மைகள் எவை தீமைகள் என்பவற்றை எல்லாம் தக்க அறிஞர்களைக் கொண்டு சிறையில் உள்ளவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். மேலும் அவர்களுக்குப் பெற்றோரை மதித்தல், முதியோரைப் பேணல், உறவினர்களை அரவணைத்தல் போன்றவற்றை வலியுறுத்தும் அறநெறிக் கல்வியை அளிக்க வேண்டும் என்று மணிமேகலை மன்னரிடம் வேண்டினாள்.

### கற்கண்டு : பெயர்ச்சொல்

1.இடுகுறிப்பெயரை வட்டமிடுக. **விடை: (ஆ) மண்**

2.காரணப்பெயரை வட்டமிடுக.**விடை:(ஆ)வளையல்**

3.இடுகுறிச் சிறப்புப் பெயரை வட்டமிடுக.
**விடை: (ஆ) வாழை**

**குறுவினா**

**1.பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?**
பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவை, பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் என்பனவாகும்.

**2.இடுகுறிப்பெயர் என்றால் என்ன?**
நம் முன்னோர் காரணம் கருதாமல் பெயர்களை இட்டு வழங்கினர். அதுவே இடுகுறிப்பெயர் ஆகும்.

**3.காரணப்பெயர் என்றால் என்ன?**
காரணம் கருதிச் சில பெயர்களை இட்டனர். அப்பெயர் காரணப்பெயர் எனப்படும்.

**சிறு வினா**

**1.அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.**
1.பொருட்பெயர் : பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும்.
2.இடப்பெயர் : ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.
3.காலப்பெயர் :காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.
4.சினைப்பெயர் :பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.
5.பண்புப்பெயர் :பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும்.
6.தொழிற்பெயர் ˙ தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

**2.அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக..**
பொருட்பெயர் எ.கா: மரம், செடி, மயில், பறவை.
இடப்பெயர் எ.கா: சென்னை, பள்ளி, பூங்கா,
காலப்பெயர் எ.கா: நிமிடம், நாள், வாரம்,
சினைப்பெயர் எ.கா: கண், கை, இலை, கிளை.
பண்புப்பெயர் எ.கா: வட்டம், சதுரம், செம்மை,
தொழிற்பெயர் எ.கா: படித்தல், ஆடுதல், நடித்தல்.

### வாழ்வியல் : திருக்குறள்

1.ஏழைகளுக்கு உதவி செய்வதே----ஆகும்.
**விடை: ஆ) ஈகை**

2.பிற உயிர்களின் -------க் கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும். **விடை: இ) துன்பத்தை**

3.உள்ளத்தில் --------- இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும். **விடை: ஈ) குற்றம்**

குறுவினா

**1.அறிவின் பயன் யாது?**
பிற உயிரின் துன்பத்தைத் தமது துன்பம் போல் கருதுவது அறிவின் பயன் ஆகும்.

**2.பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?**
தம்மிடம் இருப்பவற்றைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும்.

**3.ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?**
இல்லாதவர்க்குத் தருவதே ஈகை ஆகும், மற்றவை எல்லாம் பயனை எதிர்பார்த்துச் செய்பவை ஆகும்.

**விரிவானம்: பாதம்**

**பாதம் கதையை சுருக்கி எழுதுக.**

**முன்னுரை**
காலணி தைக்கும் மாரி வழக்கம் போல் தியேட்டர் வாசலில் உட்கார்ந்திருந்தார். மழை காரணமாக எவரும் செருப்பு தைக்க வரவில்லை.

**சிறுமி**
குடையில்லாமல் நனைந்தபடி சிறுமியொருத்தி, அவன் அருகில் வந்து, தனது இடக்கையில் வைத்திருந்த காலணி ஒன்றை தைத்து வைக்கும்படி சொல்லிவிட்டு, சென்றாள்.

**காத்திருப்பு**
மாரி கிழிசலைத் தைத்து வைத்துக் கொண்டு காத்திருந்தார். மூன்று நாட்கள் கடந்தன, அவள் வரவேயில்லை. காத்துக் கொண்டே இருந்தார். மாரியின் மனைவி அந்தக் காலணியைக் கண்டாள்.

**பொருத்தம்**
தனது வலது காலில் அந்தக் காலணியை நுழைத்துப் பார்த்தாள். அது அவளுக்கு சரியாக இருந்தது. காலணி அவருக்குள்ளும் ஆசையைத் தூண்டியது. போட்டுப் பார்க்கலாமென, தன் வலக்காலைச் சிறிய காலணியில் நுழைத்தபோது அது தனக்கும் சரியாகப் பொருந்துவதைக் கண்டார். அது எல்லோருக்கும் பொருந்துவதாக இருந்தது.

**பணக்காரன்**
அந்தச் செருப்பை அணிந்து பார்க்க சிலர் பணம் தரவும் தொடங்கினர். தினசரியாகப் பணம் பெருகிக் கொண்டே போனது. வருடங்கள் புரண்டன. அவர் பசு இரண்டு வாங்கினார். வீடு கட்டிக் கொண்டார். இப்படியாக மாரியின் முப்பது வருடம் கடந்தது. ஓர் இரவில் அதைத் திருட முனைந்த இருவர் தடியால் தாக்க, கீழே வீழ்ந்தார். யாரோ அவரைக் காப்பாற்றினார்கள். காலணி திருடு போகவில்லை.

**சிறுமி மீண்டும்**
சிறுமி பெரியவளாக வந்து நின்றாள். மாரி அவளுடைய செருப்பை கொடுத்தார். அவளைப்பற்றி அறிய அவளை வினவினார் மாரி. ஆனால் அவள் பதில் ஏதும் கூறாமல் சிரித்தபடியே மாரியின் வீட்டை விட்டு நீங்கினாள்.

**முடிவுரை**
வெளியே சென்றதும் அந்த வலதுகால் செருப்பை அணிந்தாள். அது அவளுக்குப் பொருந்தவில்லை.

இயல்-3

**கவிதைப்பேழை : ஆசியஜோதி**

1.புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல் ---------.
**விடை: ஆ) ஆசிய ஜோதி**

2.நேர்மையான வாழ்வை வாழ்பவர்--------------.
**விடை: அ) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர்**

3.ஒருவர் செய்யக் கூடாதது----**விடை: (ஆ) தீவினை**

4.எளிதாகும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது---------------ஆகும்
**விடை: (இ) எளிது + ஆகும்**

5.பாலையெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-----.**விடை:(ஆ)பாலை+எல்லாம்**

6.இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை: (இ) இன்னுயிர்**

7.மலை+எலாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை: (இ) மலையெல்லாம்**

**குறு வினா**

**1.அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?**
இறந்த உடலுக்கு உயிர் கொடுத்து எழுப்புவது மன்னனாலும் முடியாத செயல்.

**2.எறும்பு எதற்காகப் பாடுபடுகிறது?**
எறும்பு தன் உயிரைக் காத்துக் கொள்ளப் பாடுபடுகிறது.

**3.ஒருநாளும் விட்டுச் செல்லாதது எது?**
ஒருவர் செய்த நன்மையும் தீமையும் ஒருநாளும் அவரை விட்டுச் செல்லாது.

**4.உலகம் முழுமையையும் எப்போது ஆளமுடியும்?**
நல்ல மனம் கொண்டிருப்பவரால் மட்டுமே பரந்த இவ்வுலகம் முழுமையையும் இரக்கத்தால் ஆட்சி செய்ய முடியும்.

**சிறுவினா**

**1.எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?**
உயிர்களை அழிப்பது எளிய செயல். ஆனால், உயிர் கொடுத்து எழுப்புவது மன்னனாலும் முடியாத செயல்.இரக்கம் கொள்பவரே நேர்மையான வாழ்வு வாழ்பவர். இந்த மறைபொருளை அறியாதவர் பிற உயிர்களை வருத்தித் தாமும் துன்புறுவர்.
ஒருவர் செய்த நன்மையும் தீமையும் ஒருநாளும் அவரை விட்டுச் செல்லாது. ஆகையால், தீய செயல்களைச் செய்யாதீர்கள். மற்ற உயிர்களும் மகிழ்வோடு வாழ வழி செய்யுங்கள்.

**உரைநடை உலகம் : மனிதநேயம்**

1.எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல்
**விடை: இ) மனிதநேயம்**

2.தம் பொருளைக் கவர்ந்தவரிடமும் ------காட்டியவர் வள்ளலார். **விடை: ஈ) அன்பு**

3.அன்னை தெரசாவிற்கு ~~~~~~~க்கான "நோபல் பரிசு" கிடைத்தது. **விடை: ஈ) அமைதி**

4.கைலாஷ் சத்யார்த்தி தொடங்கிய இயக்கம்
**விடை: அ) குழந்தைகளைப் பாதுகாப்போம்**

**குறுவினா**

**1.யாரால் உலகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது?**
மனிதநேயத்துடன் வாழ்பவர்களால் தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**2.வள்ளலார் பசிப்பிணியை நீக்க என்ன செய்தார்?**
வள்ளலார் பசிப்பிணியைப் போக்க வடலூரில் சத்திய தருமச் சாலையைத் தொடங்கி எல்லாருக்கும் உணவளித்தார்.

**3.அன்னை தெரசா கண்ணீர் விடக் காரணம் யாது?**
தொழுநோய் பாதித்த மூதாட்டி,ஆதரவில்லாமல் சாலையில் கிடந்தார்.அனைவரும் அவளை வெறுப்பதாகக் கூறினாள். இதைக்கேட்ட அன்னை தெரசா கண்ணீர் விட்டார்.

**சிறுவினா**

**கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த இளமைக்கால நிகழ்வு யாது?**
கைலாஷ் சத்யார்த்தி சிறுவயதில் தினமும் பள்ளிக்கூடம் செல்லும் பொழுது சாலையோரத்தில் ஒரு சிறுவனைக் காண்பார். அவன் தன் தந்தையுடன் அமர்ந்து வேலை செய்து கொண்டிருப்பான்.
ஏன் அந்தச் சிறுவன் தன்னைப்போல் பள்ளிக்கு வரவில்லை என்ற கேள்வி அவர் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. தன் ஆசிரியரிடமும் பெற்றோரிடமும் இக்கேள்வியைக் கேட்டார். "பணம் இல்லாததால் அச்சிறுவன் பள்ளிக்கு வரவில்லை. வீட்டின் உணவுத் தேவையை நிறைவு செய்யப் பணம் வேண்டும். எனவே அவன் பணம் ஈட்ட வேலை பார்க்கிறான்" என்ற பதில் கிடைத்தது. அந்தப் பதில் அவருக்கு மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது.இதுவே கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த இளமைக்கால நிகழ்வாகும்.

**கற்கண்டு:அணி இலக்கணம்**

**1.உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் யாது?**
ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளபடியே அழகுடன் கூறுவது இயல்பு நவிற்சி அணி ஆகும்.

**2.உயர்வு நவிற்சி அணி என்பது யாது?**
ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.

**விரிவானம்**

**"முடிவில் ஒரு தொடக்கம்" என்ற தலைப்பின் காரணம் குறித்துக் கூறுக.**

- ❖ தனது உயிரையே பிறருக்குத் தானமாக அளித்த ஹிதேந்திரனின் பெற்றோர் செயலை என்னவென்று சொல்வது என்றே தெரியவில்லை. ஆயிரம் கனவுகளோடு வளர்த்த மகனின் உடல் உறுப்புகளைப் பிறருக்கு கொடுக்க முன்வந்தனர். அவன் இறந்தும் வாழ வேண்டும் என்று நினைத்தனர். அவனது முடிவு ஒரு தொடக்கமாகப் பிறருக்கு அமைய வேண்டும் என்று எண்ணினர். ஹிதேந்திரனின் இறுதி முடிவு பல மனிதர்களுக்குத் தொடக்கமாக அமைந்துள்ளது. அவர்கள் எடுத்த முடிவு சரியானதே.
- ❖ பல மனிதர்களின் முடிவு, முடிவாகவே அமைந்து விடுகின்றது. அவை, மண்ணுக்குள்ளேயே மடிந்தும் முடிந்தும் விடுகிறது. பல உயிர்கள் வாழ வழிவகை இல்லாமல் போய் விடுகின்றது. இதனால் பல உயிர்கள் மடிந்தும் விடுகின்றது. ஒரு மனிதனின் முடிவு பல மனிதர்களின் தொடக்கத்திற்கு வழிவகை செய்கிறது.
- ❖ ஆகவே, "முடிவில் ஒரு தொடக்கம்" என்ற தலைப்புத் தக்க காரணத்துடன் நம் பாடத் தலைப்பிற்குப் பொருந்தி வந்துள்ளது.

**கட்டுரை**

**1.தேசிய ஒருமைப்பாடு**

**முன்னுரை**
அனைவரும் ஒற்றுமையுணர்வுடன் இருப்பதே தேசிய ஒருமைப்பாடு.

**தேசிய ஒருமைப்பாடு**
- ❖ நாம் ஒவ்வொருவரும் இந்தியத் தாயின் புதல்வர்கள்.அதனால் எவ்வித வேறுபாடும் இன்றி,ஒற்றுமையாக இருக்க வேண்டும்.
- ❖ மொழி,மதம் ,சாதி,இனம்,மாநிலம் என நம்மைப் பிரித்து நம்முடைய ஒற்றுமையை அழிக்கும் சில தீய சக்திகள் நம்நாட்டில் உள்ளன.அதனை வேரோடு அறுக்க வேண்டும்.
- ❖ நம் நாட்டின் விடுதலைக்குப் போராடியவர்கள் அனைவரும் நம் ஒற்றுமைக்குத் தான் ஒற்றுமையாக ஆங்கிலேயரை எதிர்த்தனர் என்பதை நாம் உணரவேண்டும்.

**முடிவுரை**
இந்தியர்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஒற்றுமையுடன் இருந்து நம் நாட்டை வல்லரசாக மாற்றுவோம்.

**2.அறம் செய விரும்பு**

**முன்னுரை**
அறம் செய விரும்பு என்றவர் ஔவையார். இக்கட்டுரையில் காண்போம்..

**அறம் செய விரும்பு**
- ❖ எவையெல்லாம் நல்லனவோ அவையே அறச்செயலாகும்.எல்லா உயிர்க்கும் நன்மை செய்வதே அறம் ஆகும்.
- ❖ நாளும் அறத்தையே செய்ய வேண்டும்.
- ❖ எந்த வயதிலும் எந்தக் காலத்திலும் அறம் செய்யலாம்.
- ❖ அதியமான்,பாரி எனப் பலரும் அறச் செயலால் சிறந்தனர்.
- ❖ வள்ளுவரும் வள்ளலாரும் எல்லா மதமும் அறம் செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றது.
- ❖ அறம் செய்ய பணம் தேவையில்லை. மனம் இருந்தாலே போதும்.

**முடிவுரை**
மாணவராகிய நாமும் அறம் செய விரும்புவோம்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

கடிதம்

நூல்கள் அனுப்ப வேண்டிப் பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக.

அனுப்புநர்

----------------------- (பெயர்)
------------------------- தெரு,
------------------------- மாவட்டம்.

பெறுநர்

தமிழ்ப் பதிப்பகம்,
கோவை-2.

மதிப்புக்குரிய ஐயா,

பொருள் : நூல்கள் அனுப்பு வேண்டுதல்- சார்பாக

வணக்கம்.தங்கள் பதிப்பகம் வெளியிட்டுள்ள திருக்குறள் உரை நூல் இரண்டு படிகள் தேவைப்படுகின்றன. மேற்கண்ட என்னுடைய முகவரிக்கு நூல்களை அனுப்புமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.நன்றி!

இடம்:------------- இப்படிக்கு,

நாள்---------------- ---------------(கையொப்பம்)

உறைமேல் முகவரி

பெறுநர்

தமிழ்ப் பதிப்பகம்,
கோவை-2.

கலைச்சொல்லாக்கம்

இயல் -1

1.Patriotism - நாட்டுப்பற்று

2.Art Gallery - கலைக்கூடம்

3.Litrerature -இலக்கியம்

4.Knowledge of Reality - மெய்யுணர்வு

இயல்-2

1.Trust- அறக்கட்டளை

2.Volunteer- தன்னார்வலர்

3.Junior Red Cross-இளம்செஞ்சிலுவைச் சங்கம்

4.Scouts&Guides- சாரணசாரணியர்

5.Social Worker- சமூகப்பணியாளர்

இயல்-3

1.Humanity- மனிதநேயம்

2.Mercy- கருணை

3.Transplantation - உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை

4.Noble Prize- நோபல் பரிசு

5.Lorry - சரக்குந்து

ச.சேட்டு மதார்சா,
தமிழாசிரியர்,
ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு.
8883681115

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com